**வடக்கு மாகாண சபை – 2022**

**------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடக்கு மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 21 யூன் 2023 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 13 யூலை 2023 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 08 கல்வி வலயங்களின் சுகாதாரப் பணிகள் மற்றும் தர உள்ளீடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 76.28 மில்லியன் மீண்டெலும் செலவுகளாக நிதிச் செயலாளர்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | அந்த பணத்தை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிளிநொச்சி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 54 காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய ரூபா 275.93 மில்லியனான மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தீர்ப்பனவு மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் ரூபா 0.93 மில்லியன் மேலும் நிதி அல்லாத சொத்துக்களாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை அல்லாத சொத்துக்களில் இருந்து அந்த பெறுமதி கழிக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 10 திணைக்களங்களின் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி மற்றும் CIGAS மென் பொருள்களின் பிரகாரம் இந்த சொத்துக்களின் பெறுமதிகளுக்கியில் ரூபா 2,402 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது. | இந்த வேறுபாடுகளை சிகாஸ் மென்பொருளில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- வேண்டுமென்றே, விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்தத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 401- மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மாகாண சபையில் பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் காணப்பட்ட போதிலும், ஆனைக்குழு அலுவலகம் தனியார் கட்டிடம் ஒன்றில் இயங்கி வந்ததால் 2011ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 15.35 மில்லியன் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அலுவலக ஸ்தானத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செலவுகளை குறைத்துக் கொள்வதற்கும் சொத்துக்கள் பயன்பாட்டின்றி வைக்காதிருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.2 தலைப்பு – 412 மாகாண கல்வி கலாச்சார அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 06 கல்வி வலயங்களின் 69 பாடசாலைகளில் யுத்தம் மற்றும் திருட்டு காரணமாக காணாமல் போன மொத்தம் ரூபா 55 மில்லியன் தொடர்பாக கடந்த 22 வருடங்களில் இருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த வலயங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் பின் தொடர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. துரிதமாக மேற்குறித்த நட்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் கூட்டு மொத்தம் ரூபா 515.48 மில்லியனான 34 பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 06 மாதங்களில் இருந்து 12 மாதங்கள் வரையான ஒப்பந்த காலமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும், இதுவரை எவ்வித நிர்மான பணிகளும் நிறைவடையப்பட்டிருக்கவில்லை. | மேற்குறித்த வேலை திட்டங்கள் மத்திய கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படும். | செலவிடப்பட்ட பணத்திற்கு பயன்பாடொன்று காணப்பட வேண்டும். |
| (இ) | பாடசாலையின் 30 ஆய்வுக்கூட உதவி உத்தியோகத்தர்களுக்கான தடை தாண்டல் பரீட்சை 04 வருடங்களிலிருந்து இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன், சம்பள முரண்பாடு தீர்க்கப்படாத காரணத்தினால் அதில் 11 பேருக்கு 02 வருடமும் 04 வருடங்களுக்கு இடையிலான வருடாந்த சம்பள அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தடை தாண்டல் பரீட்சை இடம் பெற்றுள்ளது. சித்தியடைந்த பின்னர் சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பள ஏற்றத்தாழ்வு முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | அதிபர்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய நிர்வாக நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br>i. கோவைகள் இற்றைப் படுத்தப்படாமை, தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்படாமை போன்ற காரணங்களினால் 489 அதிபர்களுக்கான தர உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>ii. 01 வருடம் முதல் 05 வருட காலத்திலிருந்து 651 அதிபர்களுக்கான சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிர்வாக நடவடிக்கைகள் வினைத்திறனாக நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| iii. 45 அதிபர்களின் சரியான சம்பளத்தை கணக்கிட்டு நிலுவை சம்பளம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>iv. 01 வருடம் முதல் 07 வருட காலம் கடந்திருந்த போதிலும் 639 அதிபர்களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட வில்லை.<br>v. 639 அதிபர்கள் ஓய்வு பெற்று போதுமான காலம் கடந்திருந்த போதிலும் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது.<br>vi. 232 அதிபர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் இதுவரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) கல்வித் திணைக்களத்தினால் கூட்டு மொத்தம் ரூபா 1.5 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண பணியொன்று கடந்த 03 வருடங்களில் இருந்து பூரணப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரில் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்று நிருபத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கும் நிறுவனத்திற்கும் நட்டம் ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) பிரகாரம் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட செலவிற்கு போதுமான பயன்பாடுகள் கிடைக்க பெற வேண்டும். |

**1.5.3 தலைப்பு 420 – மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| (அ) மாகாண சபைக்கு உரித்தான 139 கட்டிடங்கள் 02 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலத்தில் இருந்து பாவனைக்குட்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளைப் பெற்றுக் கொண்டு தேவையான திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைக்காதிருக்க வேண்டும். |
| (ஆ) மாகாண சபைக்கு உரித்தான 94 வாகனங்கள் 02 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வறையான காலத்தில் இருந்து பாவனையின்றி காணப்படுகின்றது. | பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைக்காதிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வட மாகாண சபை நிதிக்கூற்றில் நட்டம் மற்றும் கைவிடுதலின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபாய் 20.44 மில்லியன் நிதி மோசடிக்கு உரிய விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைகள் நிதியத்திற்கு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அந்த நட்டத்தை தாமதமின்றி அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி 1350 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையொன்று காணப்படுகின்றது. | உரியவாறு பதில் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை ஊழியர்களை ஆக்கபூர்வமான முறையில் நியமிக்க வேண்டும். |
| (உ) | கல்வி மற்றும் சுகாதார பிரிவு நீங்களாக மாகாண சபையின் ஏனைய பிரிவுகளின் பதவிய அணியினரின் சிரேஷ்ட நிலையில் 112 வெற்றி இடங்களும் மூன்றாம் நிலையில் 61 வெற்றிடங்களும் மற்றும் இரண்டாம் ஆரம்ப நிலை மற்றும் ஏனைய வெற்றிடங்கள் 1975 உள்ளடங்களாக மொத்த 2148 வெற்றி இடங்கள் காணப்படுகின்றது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளன. | தேவைக்கேற்ப வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண கல்வி அமைச்சு மற்றும் சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் 01 வருடம் முதல் 03 வருட காலத்தில் இடம்பெற்ற ரூபா 0.42 மில்லியன் பெறுமதியான பொருட்கள் காணாமல் போனது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படும். | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 தலைப்பு 421 - பிரதி பிரதான செயலாளர் (நிதி) அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய வட மாகாண திரைசேரிக்கு கிடைக்கப்பெற்ற முத்திரை கட்டணம் ரூபா 266 மில்லியன் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் கோரப்படாததனால் மாகாண வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வட மாகாண முத்திரை கட்டணம் நியதிச்சட்டம் 2 ஆம் பிரிவின் 2ஆம் உப பிரிவின் பிரகாரம் கோரப்படாத 02 வருடங்களை கடந்த முத்திரை கட்டணம் பல்வேறு வருமானத்திற்கு மாற்றப்பட்டது. | குறித்த அனைத்து சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டினுள் ஒதுக்கீடு ஏற்பாடு மேற்கொள்ளப்படாத கூட்டு மொத்தம் ரூபா 10.71 மில்லியனை செலுத்துவதற்கு இணங்கி இருந்தது. அதனால் அந்த தொகை பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | ஒதுக்கங்கள், கட்டு நிதி இல்லாமை, சிட்டைகள் கிடைக்க பெறாமை போன்ற காரணங்களினால் குறித்த நிதியாண்டிற்குரிய செலவுகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. | மாகாண நிதி விதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 430 - மாகாண கட்டடங்கள் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 38 வேலை மேற்பார்வையாளர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாத போதிலும் கடந்த 08 வருட காலத்தினுள் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 18.94 மில்லியன் அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக பதவி அணியினருக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறும் என நினைத்து சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

**1.5.6 தலைப்பு – 431 மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 11 அலுவலக கட்டிடங்கள் மற்றும் 174 விடுதி கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அதன் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களுக்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.5.7 தலைப்பு – 432 மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| இந்த திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளரின் கடமையை நிரப்புவதற்காக திணைக்களத்திலேயே சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை 2008 ஆம் வருடத்தில் மாகாண அரச சேவைகள் ஆணை குழுவினால் நியமிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இயந்திர பொறியியலாளர் ஒருவர் அல்லது கடமையை நிரப்புவதற்காக தகைமையுள்ள நபர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை | அபிவிருத்தி உத்தியோகத்தர் குறித்த பதவிக்கான தகைமைகளை பெற்றிருந்ததனால் அந்த கடமையை நிறைவேற்றுவதற்காக வட மாகாண அரசு சேவைகள் ஆணை குழுவினால் அதிகாரம் பெற்றுத் தரப்பட்டிருந்தது. அவ்வாறே அவரின் கொடுப்பனவையும் முகாமைத்துவ குழுவினால் | தாபனக் கோவையின் க்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொண்டு இருக்கவில்லை அத்தோடு 2011 ஆம் வருடத்திலிருந்து 2022ஆம் வருடம் வரை பதில் கடமை கொடுப்பனவாக ரூபா 2 மில்லியன் தாபனக் கோவையின் VII ஆவது பந்தியின் 12:3 பிரிவிற்கு இணங்க அந்த அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் முறையான நியமன கடிதம் ஒன்று அவருக்கு பெற்று கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்மொழியப்பட்டு பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொடுப்பனவை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ குழு அங்கீகாரம் வழங்கி உள்ளது. இந்த அனைத்து கொடுப்பனவுகளும் இயந்திரப் பிரிவின் வருமானத்திலிருந்து மாத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | |

### 1.5.8 தலைப்பு – 440 மாகாண சமூக சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ஊனமுற்ற நபர்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்காக கொல்வனோ செய்யப்பட்ட ரூபா 0.70 மில்லியன் ஆன 98 தளபாட உருப்படிகள் கடந்த 05 மாதங்கள் முதல் 39 மாதங்கள் வரையான காலம் ஒன்றில் விளைவற்று களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | தேவையுள்ள பயனாளிகளின் வேண்டுகோளின் பிரகாரம் அந்தப் பொருட்களின் பகிர்ந்தளிப்பு இடம்பெறுகிறது. | செலவிடப்பட்ட தொகைக்கு போதுமான பயன்பாடுகள் கிடைக்கப் பெற வேண்டும். |

### 1.5.9 தலைப்பு – 450 மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவன(பதிவு செய்தல்) சட்டத்தின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் பேரவையில் பதிவு செய்யப்படாத 167 தனியார் மருத்துவ நிறுவனங்கள் வட மாகாணத்தினுள் காணப்படுகின்றன. | குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் விபரங்களை சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 05 வருடங்களுக்கு ஏற்பட்ட விபத்து, சுகாதார அலுவலகங்களில் காணாமல் போன இருப்பு குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கணினி மற்றும் குறுநகர் வைத்தியசாலையில் காணப்பட்ட நாடித்துடிப்பு இயந்திரம் திருடப்பட்டிருத்தல் ஆகியவைகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. | 04 வாகனங்களின் காப்புறுதி பெறுமதி கிடைத்ததன் பின்னர் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 72 சுகாதார பரிசோதகர்கள், 43 மருந்தகர்கள், 32 வைத்தியசாலை மேற்பார்வையாளர்கள், 96 வைத்திய ஆலோசகர்கள், 73 வைத்தியர்கள், 143 வைத்திய குடும்ப நல சுகாதார சேவை பெண் உத்தியோகத்தர்கள், 130 தாதியர்கள் மற்றும் 21 பொது சுகாதார தாதி சகோதரிகள் உள்ளடங்களாக 1,909 வெற்றிடங்களுக்காக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | மத்திய சுகாதார அமைச்சினால் முன்னுரிமை அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் மேலும் ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.10 தலைப்பு – 451 மாகாண சுதேச வைத்திய திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூபா 40.8 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண பணி ஒன்று கடந்த 03 வருடங்களில் இருந்து பூர்த்தியாக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரில் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்று நிருபத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கும் நிறுவனத்திற்கும் நட்டம் ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) பிரகாரம் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட செலவிற்கு போதுமான பயன்பாடுகள் கிடைக்க பெற வேண்டும். |

**1.5.11 தலைப்பு – 472 மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 2,185 கூட்டுறவு சங்கங்களில் 1,031 சங்கங்கள் செயலிழந்து காணப்படுகின்றது. | அந்த சங்கங்களில் செயற்பாட்டு நிலைக்கு மாற்ற முடியுமான சங்கங்களை புனரமைப்பதற்கும் எஞ்சியதை கலைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன. | பொருத்தமான நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கிளிநொச்சி மாவட்டத்தின் 04 கூட்டுறவு சங்கங்களின் செயற்பாட்டை மேம்படுத்து முகமாக 2019 ஆம் வருடத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 43.84 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் பாவனையின்றி காணப்படுகின்றன. | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைக்காதிருக்க வேண்டும். |

## 1.5.12 தலைப்பு – 480 மாகாண விவசாயத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | வவுனியா அரச விதை பன்னை மற்றும் கிராஞ்சி பன்னை அமைந்துள்ள 69 ஏக்கர் காணிகள் மாகாண விவசாய திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டில்லாத போதிலும் ரூபா 957.4 மில்லியனான அதன் பெறுமதி நிதி அல்லாத சொத்தாக கணக்கிடப்பட்டிருந்தது. | உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் உரிமை தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக முற்பகணக்குகள் நடவடிக்கைகளுக்காக 2013ஆம் வருடத்தில் கிடைக்கப்பெற்ற கூட்டு மொத்தம் ரூபா 1.52 மில்லியன் ஆன குளிரூட்டியறை மற்றும் களஞ்சியசாலை 09 வருட காலங்களாக விளைவற்று காணப்படுகின்றது. | குளிரூட்டியை மீள் திருத்த முடியாததாக அறிக்கை கிடைத்துள்ளது. களஞ்சிய சாலையை பொருத்தமான வேறொரு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைக்காதிருக்க வேண்டும். |
| (இ) | விவசாய திணைக்களத்தினால் கூட்டு மொத்தம் ரூபா 42 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட 05 நிறமாண பணிகள் கடந்த 03 வருடங்களில் இருந்து பூரணப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரில் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்று நிருபத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரருக்கும் நிறுவனத்திற்கும் நட்டம் ஏற்படாதவாறு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) பிரகாரம் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட செலவிற்கு போதுமான பயன்பாடுகள் கிடைக்க பெற வேண்டும். |

## 1.5.13 தலைப்பு – 481 மாகாண காணி நிர்வாக திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | அரச காணிகளில் அனுமதியற்ற வகையில் குடி அமர்தல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற 680 பிணக்குகளில் 117 பிணக்குகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 117 பிணக்குகள் தொடர்பாக இவ் வருடத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வுகள் பெற்றுத் தரப்படும். | பிணக்குகளை தீர்ப்பதற்கு தாமதமின்றி செயல்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் அலுவலகத்திற்காக கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2023 பெப்ரவரி மாதத்தில் இருதரப்பின் இணக்கப்பாட்டில் நிறைவு செய்து அந்த செயற்திட்டம் | பதில் பெற்றுத் தரப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்ட செலவிற்கு போதுமான பயன்பாடுகள் கிடைக்க பெற வேண்டும். |

கைவிடப்பட்டதனால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 21.99 மில்லியன் விளைவற்ற செலவொன்றாக மாறி இருந்தது. அத்தோடு திணைக்களத்தின் அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக 2011ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 7.31 மில்லியன் கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 1.5.14 தலைப்பு – 482 மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | சந்தை விலை முறைமையின் கீழ் ஒப்பந்தங்களை கையளிக்கும் போது குறை நிரப்பு 35 இல் திருத்தப்பட்ட பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலுக்கு இணங்காமல் ரூபா 1 மில்லியன் வரையறையை விஞ்சிய 2 சந்தர்ப்பங்களில் ரூபா 2,427,600 க்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கடந்த மாதங்களின் வாழ்க்கைச் செலவினை கருத்தில் கொண்டு பெறுகை வரையறை மதிப்பிடப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3 (அ) வழிகாட்டலுக்கு இணங்காமல் பதிவு செய்யப்படாத வினியோகத்தர்களிடமிருந்து ரூபா 11,449,370 க்கு கால்நடை உணவுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விநியோகத்தர்களை பதிவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (இ) | வாகன சுங்கவரி செலுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 964,598 தொகை 03 வருடங்களுக்கு அதிக காலத்திலிருந்து பொது வைப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | துரிதமாக சுங்கவரி செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொறுப்புக்கள் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | பால் சார்ந்த உற்பத்திகளை தயாரிப்பதற்காக அணிண் ஐயன்குளம் பன்னைக்காக 2013 ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2.72 மில்லியன் ஆன 05 உபகரணங்கள் செய்யப்பட்ட தினத்திலிருந்து பாவனைக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உட்படுத்தப்படாத இயந்திரங்கள் மற்றும் சொத்துக்களை சமூக நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் கையளிப்பதற்கு பிரதான செயலாளரின் அங்கீகாரத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைக்காதிருக்க வேண்டும். |

**1.5.15 மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 7இன் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நிதி நிலைமை கூற்றின் பிரகாரமான ரூபா 3.94 மில்லியன் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் கடந்த 05 வருட காலமாக மீளாய் விற்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு மீளாய் விற்குட்படுத்தப்படும். | கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 1ஆம் இலக்க மாகாண போக்குவரத்து அதிகார நியதி சட்டத்தின் பிரகாரம் முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் 47 ஊழியர்களுக்கு மற்றும் தலைவருக்கும் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய வருடத்தில் கூட்டு மொத்தம் ரூபா 4.67 மில்லியனான போக்குவரத்து கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் 04 சுற்று நிருபங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் அந்த சுற்று நிருபங்கள் எதுவும் மாகாண சபைக்கு உரியதாக இருக்கவில்லை. | குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மாகாண போக்குவரத்து அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் 2ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 37 ஆவது பிரிவின் 1ஆம் பந்தியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் சபையினால் தீர்மானிக்க முடியுமான அவ்வாறான முறையில் மற்றும் அவ்வாறான வீதத்தில் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துக்கொள்கிறேன். | கொடுப்பவை மேற்கொள்வதற்கு முன்னர் முறையான அங்கீகாரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |